கள் செங்குத்தாகப் பொருத்தப்படுகின்றன என்றும், வெளிப்படும் வாயு அதன் விளைவாக விரைவாக மேல் நோக்கிச் செல்வதால் சுற்றுப்புறக் காற்றின் தூய்மை கெடுவது பெருமளவுக்குக் குறைக்கப்படுகிறது என்றும் தெரிய வந்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள மோட்டார் வண்டிகள் அனைத்திலும் இம் முறையைப் பின்பற்றலாமா என்று அரசு பரிசிலனை செய்து வருகிறது.

THIRU K. VINAYAKAM: Is the Hon. Minister aware of the fact that the voluminous smoke puffed out of the diesel engines in the State Transport buses is the main cause for prevalence of jaundice in Madras City and will the Government take steps to see that the smoke is puffed out at the top of the buses like the locomotive engines?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மஞ்சள் காமாலை நோய்க்கும் இந்த புகைபோக்கிகளுக்கும் சம்பந்தமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கனம் உறுப்பினரைப் பார்த்தால் அப்படி தெரியவில்லை.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, may I know from the Minister the number of buses that the Government has planned to remodel so as to make smoke go up instead of making it go down and thus reduce the concentration of smoke and also whether it is not a fact that the main reason for thick fumes coming out is mainly due to the condition of the engines not being good or efficient and whether the Government will take up first the buses whose engines are not good for remodelling so as to make the smoke go up?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய ஆலோசனை கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசுப் பேருந்துகள்

***500 வினு—திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரிலிருந்து வடமலைக்குறிச்சிக்கு போடப்பட்டுள்ள சாலையில் அரசு பஸ் போக்குவரத்து உண்டா?

(இ) பஸ் போக்குவரத்து உள்ள சாலையில் கல் பரப்புதல் (மெட்டல் செய்யவேண்டுமென்ற விதி) உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இல்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவரவர்களே, இந்த வடமலைக்குறிச்சிக்கு இப்பொழுது போடப்பட்டிருக்கும் ரோட்டில் பஸ் போக்குவரத்து இருப்பதன் காரணமாக மிகவும் பழுதாகி

யிருக்கிறது. எனவே, இப்பொழுது இல்லையென்றாலும், அதை உடனடியாகச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த பஸ் போகின்ற சாலை பழுதடைந்திருப்பதாகக் குறிப்பு இல்லை. ஆனால் அந்தச் சாலையை, 'ஃபிட்நெஸ் சர்ட்டிபிகேட்' பெற்ற பிறகுதான் பஸ் விட அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

** 501 வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :*

தஞ்சை மாவட்டம், வேதாரணியத்திலிருந்து திருத்துறைப் பூண்டி—முத்துப்பேட்டை—பட்டுக்கோட்டை வழியாக அரசாங்கத்தின் விரைவுப் பேருந்து திருச்சிராப்பள்ளிக்கு விடுகின்ற செயற் குறிப்பு எதுவும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தென்கிழக்குக் கோடியிலுள்ள மிகப் பெரிய ஊர் வேதாரணியம். அந்த ஊரிலிருந்து திருச்சிக்கு நாள்தோறும் சுமார் 50, 60 பேர்கள் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, பட்டுக்கோட்டை, முத்துப்பேட்டை வழியாக அரசாங்கப் பேருந்து விடுவதுபற்றி அரசாங்கம் மீண்டும் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. இப்பொழுது சேலத்திற்கும் தஞ்சைக்கும் இடையிலுள்ள அரசாங்க பஸ்ஸைக் கொண்டே மேற்படி போக்குவரத்து சமாளிக்கப்படும் என்று கருதப்படுகிறது. தற்போது வேதாரணியத்திலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு அரசாங்க பஸ் விட செயற் குறிப்பு இல்லை.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவரவர்களே, சென்னையிலிருந்து வேதாரணியத்திற்குச் செல்பவர்களுக்கு, வேதாரணியம் முக்கியமான ஸ்தலமாக இருப்பதால் அதிகப் போக்குவரத்து இருப்பதால், சென்னையிலிருந்து வேதாரணியத்திற்கு துரிதப் பஸ் விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னையிலிருந்து ...ணியத்திற்கு அதிக ஜனப் போக்குவரத்து இல்லை என்று ...விசாரிப்பில் தெரிய வருகிறது.